IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.167/2021

Deposition of Witness for P.W.15

| | | |
|---|---|---|
| NAME | - | அபிலாஷ் |
| FATHER NAME | | உதயசூரியன் |
| OCCUPATION | | VAO (Gurvarajapalayam) Anaicut Taluk |
| AGE | | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் குருவராஜபாளையத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 18.06.2021 அன்று சின்னபள்ளிக்குப்பம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது நானும், குருவராஜபாளையம் கிராம நிர்வாக அலுவலர் வெங்கடேசனும் பணியில் இருந்து குருவாராஜபாளையம் பேருந்து நிலையத்தில் வசந்த் என்பவரை வேப்பங்குப்பம் போலிசார் கைது செய்து இருந்தன். அப்போது மாலை 4 மணி இருக்கும். அப்போது நாங்கள் இருவரும் போலிசாரிடம் என்ன விவரம் என்று விசாரித்தோம்.

அப்போது வசந்த்தை பேருந்து நிலையத்தில் விசாரித்து விட்டு, வேப்பங்குப்பம் காவல் நிலையத்திற்கு அழைத்து போனத்தார்கள்.அங்கு எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தில் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், வெங்கடேசனும் ஒரு கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது அ.த.சா.ஆ.14 ஆகும். பிறகு நாங்கள் வீட்டிறகு போய் விட்டோம். போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

சின்னபள்ளிக்குப்பம்-குருவராஜபாளையம் 7 கீ.மீட்டர் தூரம் இருக்கும். நான் குருவராஜபாளையம் வி.ஏ.ஒ. வாக அப்போது பணிபுரியவில்லை. இந்த வழக்கில் சாட்சியாக இருப்பதற்கு போலிசார் எனக்கு சம்மன் எதுவும் கொடுக்கவில்லை. நான் போலிசாருக்கு ஆதரவாக காவல் நிலையத்தில் பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. குருவராஜபாளையம் பேருந்து நிலையத்திற்கு செல்லவில்லை என்றும், போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 14.07.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.07.18 09:40:01 +0600

Additional District Judge(FTC),

Vellore.